# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15–ம் நாள் திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திருமதி. ஷர்மிளா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **விலங்கன்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**15.09.2025** **OS.11/2020** **பி.வா.சா.1 ஆஜர்**

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

முத்துக்கருப்பன் எனது சகோதரர் ஆவார். கிருஷ்ணன், சங்கையா ஆகியோர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது பங்காளிகள் ஆவார்கள். 3,4 பிரதிவாதிகள் விலங்கு கருப்பணசாமி கோவிலுக்கு சம்மந்தமில்லாதவர்கள் என்றால் சரியல்ல. வாதிகள் என்ன பரிகாரம் கோரி இந்த தாவாவை தொடர்ந்துள்ளனர் என்றால் நாங்கள் சாமி கும்பிடக்கூடாது என்றும் பொங்கல் வைத்து வழிபடக்கூடாது என்றும் பரிகாரம் கோரி இந்த தாவாவை தொடர்ந்துள்ளனர். வாதிகள் தாவாவில் எத்தனை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் எனக்கு தெரியாது. விலங்கு கருப்பணசாமி கோவில் எந்த புல எண்ணில் அமைந்துள்ளது என்றால் 42/4,42/5,42/6 ல் அமைந்துள்ளது. மேற்படி சர்வே எண்ணிற்கு விலங்கு கருப்பனசாமி கோவில் என்ற பெயரில் பட்டா உள்ளதா என்றால் சரியல்ல. மேற்படி புல எண்களுக்கு எனது தகப்பனார் மற்றும் எனது சிறய தகப்பனார் பிச்சை , பாக்கியம் பெயரில் உள்ளது. மேற்படி பிச்சையும், பாக்கியமும் தாவா கோவிலில் ஏற்கனவே பூசாரியாக இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படியார்கள் பூசாரியாக இருந்த காலகட்டத்தில் கோவிலுக்கு பாத்தியமான மேற்படி மூன்று இலக்க சொத்துக்களை தங்களது பெயரில் மாற்றினார்கள் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் காலத்தில் தாவா மூன்று இலக்க சொத்துக்கள் மேற்படி விலங்கு கருப்பனசாமி கோவில் பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் சரியல்ல. தாவா புல எண். 42/5 தற்பொழுதும் விலங்கு கருப்பனசாமி கோவில் பெயரில் உள்ளது இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயரில் இருந்ததை பிரிவினை செய்யும்போது கோவில் பெயரில் மாற்றினர். மேற்கண்டவாறு எனது தகப்பனார் பெயரில் இருந்து கோவில் பெயருக்கு மாற்றியதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் ஆவணங்கள் உள்ளது. மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர் நான் தானே என்றால் நான் இல்லை. மேற்படி புகைப்படத்தில் எனது அருகில் உள்ள நபர் தனசேகரன் தானே என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் மற்றொரு புகைப்படத்தில் மாலை போட்டவாறு நிற்கின்ற நபர் தனசேகரன் தானே என்றால் சரியாக உருவம் தெரியவில்லை. மேற்படி புகைப்படங்களில் நானும் தனசேகரனும் இருக்கிறோம்

என்றாலும் நான் வழக்கிற்காக அடையாளம் சரியாக தெரியவில்லை என்று பொய்யாக சாட்சயம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தனசேகரன் தான் தாவா வழக்கின் 1ம் வாதி என்றால் சரிதான். 3ம் வாதி மனோகரனின் தகப்பனார் பெயர் கருப்பையா என்றால் சரிதான். 1ம் வாதி தனகேசரனின் மகன் பெயர் கருப்பனராஜா என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதி தரப்பு 2வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட செல்வம் என்பவரின் மகள் பெயர் விலங்கேஷ்வரி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் வாதி கருப்புசாமி, 3ம் வாதியின் தகப்பனார் கருப்பையா ,1ம் வாதியின் மகன் கருப்பனராஜா ஆகியோருக்கு குல தெய்வமான விலங்கு கருப்பசாமியின் பெயரை தான் குறிக்கிறது என்றால் சரியல்ல. வாதிகள் தரப்பு 17 குடும்பங்களிலுமே குல தெய்வமான விலங்கு கருப்பசாமி குறிப்பிட்டு பெயர் வைப்பது தொன்றுதொட்டு வருகிறது என்றால் சரியல்ல. கோவில் சொத்தை மோசடியாக எனது தகப்பனார் அவருடைய பெயருக்கு மாற்றிக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் மாண்பமை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனுவில் விலங்கு கருப்பனசாமி கோவில் குறிப்பிட்டு மனுதாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதிகள் அவ்வாறு வழக்கில் குறிப்பிட்டிருந்ததால் நாங்களும் அவ்வாறு குறிப்பிட்டோம். தாவா வழக்கிற்கு முந்திய வழக்கு தான் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்ட நீதிப்பேராணை மனுவில் கண்ட உத்தரவு என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் ஏற்பட்ட உத்தரவில் வருவாய் வட்டாட்சியர் தான் இந்த பிரச்சனை சம்மந்தமாக விசாரணை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் ஸ்ரீ விலங்கு கருப்பனசாமி ஆலைய களரி உற்சவ விழா அழைப்பிதழ் என கண்டு அச்சிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சமாதான கூட்டத்தை திருப்பாச்சேத்தி காவல் ஆய்வாளர் வேண்டுகோளின்படி வட்டாட்சியரால் கூட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.3 சமாதான கூட்டத்திற்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பில் எனது பெயர் முதலாவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சமாதான கூட்டத்திற்கு பின்னீடு தான் பி.வா.சா.ஆ.4 மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு ஏற்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 களரி அழைப்பிதலுக்கு முந்தைய காலகட்டத்தில் நடைபெற்ற களரி சம்மந்தமாக அழைப்பிதழ்கள் என்னிடம் உள்ளது என்றால் என்னிடம் இல்லை. அதற்கு முந்தைய காலகட்டத்தில் பத்திரிக்கைகள் அடிப்பதில்லை. பி.வா.சா.ஆ.5 அழைப்பிதழ் நீதிப்பேராணை மனுவிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தாவா கோவில் ஊருக்கு எந்த திசையில் உள்ளது என்றால் மேற்கு திசையில் உள்ளது. எங்கள் வீடுகள் ஊருக்கு கிழக்கு திசையில் உள்ளது என்றால் சரிதான். வாதிகளின் வீடு ஊரின் நடுப்பகுதியில் உள்ளது என்றால் சரிதான். வாதிகளின் வீடு அருகே விலங்கு கருப்பனசாமிக்கான கோவில் வீடு வாதிகளின் பராமரிப்பில் உள்ளது என்றால் சரியல்ல. வாதிகளின் பராமரிப்பில் உள்ள கோவில் வீடு நத்தம் சர்வே எண்.222/20 ல் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. மேற்படிபுல எண்ணில் வாதிகளின் பராமரிப்பில் விலங்கு கருப்பனசாமி கோவிலுக்கு வீடு உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி புல எண்.222/20 ல் அமைந்துள்ள கோவில் வீட்டில் தான் கரகம் எடுத்துவருவதற்கான தளவாட ஜாமான்கள், பூஜை பெட்டிகள், பொங்கல் பானைகள் ஆகியன உள்ளது என்றால் சரியல்ல. நத்தம் புல எண்.222/20

வருவாய் ஆவணங்களில் விலங்கு கருப்பனசாமி கோவில் பெயரில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மேற்படி புல எண்ணில் உள்ள கோவில் வீடு வாதிகளின் பராமரிப்பில் இருந்து வரும் விபரமும் மேற்படி புல எண்ணுக்கான வருவாய் ஆவணங்கள் அனைத்தும், மேற்படி கோவில் பெயரில் இருந்து வரும் விபரமும் எனக்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.மகா சிவராத்திரி, வைகாசி களரி ஆகிய நாட்களில் மேற்படி நத்தம் புல எண்.222/20 ல் உள்ள கோவில் வீட்டில் இருந்து தான் வாதிகள் பெட்டி மற்றும் கரக தளவாட ஜாமான்களை எடுத்து வந்து வைகை ஆற்றில் நீராடி கோவிலுக்கு பொங்கல் வைத்து சாமி ஆடி வருவது வழக்கம் என்றால் சரியல்ல. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் நீதிப்பேராணையில் உத்தரவுப்படி (பி.வா.சா.ஆ.4) அதன் பின்னர் வட்டாட்சியர் சமாதான கூட்டம் நடத்தி நாங்கள் பூசாரியாக இருக்கவேண்டும் என்றும் வாதிகள் தான் பெட்டி தூக்கி, கரகம் எடுத்து, சாமி ஆடி பொங்கல் வைக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. நான் ஒத்தக்கொள்ளாத நிலையில் மேற்படி உத்தரவை எதிர்த்து எந்த மேல் நடவடிக்கையாவது எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam